தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 22/பேரூ/2021

நாள் 15.09.2021

திருமதி. E. சாந்தி,
பஞ்சலிங்கபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சுசீந்திரம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், பஞ்சலிங்கபுரத்தைச் சேர்ந்த திருமதி. E. சாந்தி அவர்களின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.12.2020ல் பெறப்பட்டு 22/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், 4/52 பஞ்சலிங்கபுரம், மகாதானபுரம் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. E. சாந்தி என்பவர் தான் சுசீந்திரம் பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளதாகவும், புதுப்பித்தல் கட்டணம் கட்டி முறைப்படி ஒப்பந்ததாரர் உரிமத்தை புதுப்பித்து வந்துள்ளதாகவும், தனக்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பும் கொடுக்காமல் சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் EB கிரஞ்சி தோண்டப்பட்டு கேபிள் போடப்பட்ட இடங்களில் பராமரிப்பு பணி செய்தலின்கீழ் (1) கோவில் அணுகு சாலையிலிருந்து கலையரங்கம் செல்லும் சாலை (2) மாடத்தெரு சாலை (3) நடுத்தெரு சாலை, (4) சன்னதித் தெரு சாலை, (5) வட்டப்பள்ளி மாடத்தெரு சாலை (6) சுசீந்திரம் கோவிலை சுற்றியுள்ள ரதவீதி சாலை மற்றும் (7) தெப்பக்குளம் சுற்றியுள்ள சாலை ஆகிய பணிகளுக்கு பல லட்சம் மதிப்புள்ள அனைத்து ஒப்பந்தங்களையும் தமக்கு வேண்டப்பட்ட ஒப்பந்ததாரருக்கு கையூட்டு பெற்றுக்கொண்டு கொடுத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, மேற்படி கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து முறைப்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கொடுத்து ஒப்பந்தப்புள்ளியை நடத்தவேண்டி உரிய விசாரணை

மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

2. மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 24.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

3. செயல் அலுவலர், சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் அளித்துள்ள 5.7.2021 நாளிட்ட அறிக்கையில் சுசீந்திரம் பேரூராட்சியில் மின்சார வாரியத்தால் புதைவட மின் கம்பி பதித்தல் வேலை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் பேரூராட்சி பொறியாளர் அறிக்கை பெற்று பராமரிப்புக் கட்டணம் ரூ.23,05,000/– தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து பெற்ற பின்பு புதைவட கேபிள் பதித்தல் வேலை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதென்றும், அதன்படி ஒவ்வொரு பகுதியிலும் புதைவட கேபிள் பதிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து சுசீந்திரம் தாணுமாலையன்கோவில் மார்கழித் திருவிழா முன்னேற்பாடு கருதி விரைவாக புதைவட கேபிள் அமைத்துத்தர வீதிகள் மற்றும் இதர பகுதிகளில் சாலைபராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டதென்று குறிப்பிட்டுள்ளார். அனைத்து பணிகளுக்கான ஒப்பந்த அறிவிப்புகளும் அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் வழக்கமான முறையில் சாதாரண தபால் மூலமும், அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள் அலுவலகம், சுசீந்திரத்தில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், சுசீந்திரம் ஊர்புற நூலகத்தில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், சுசீந்திரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் ஒட்டி விளம்பரப்படுத்தியும் அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் தெரியும் வகையில் பகீரங்கமாக ஒளிவுமறைவற்ற வகையில் ஒப்பந்த விளம்பரம் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தங்கள் வரவழைக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர்களுக்கு பணி ஆணை வழங்கி பணி செய்து முடிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். ஒப்பந்த அறிவிப்பு கிடைக்கவில்லை என பிற ஒப்பந்தக்காரர்கள் எவரும் புகார் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் கிடைக்கவில்லை என மனுதாரர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.566/2021 தாக்கல் செய்த வழக்கில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை கூர்நோக்கு செய்து பின்வருமாறு ஆணை பிறப்பித்துள்ளது.

> "4. x x x x x When the Court indicated that it is the duty of the Tender Inviting Authority to intimate all the contractors registered with it, the learned Standing Counsel informs me that this duty was more than discharged in this case. In fact, in the counter affidavit filed by the third respondent, it has been stated that the petitioner was duly

informed about the proposed contract and the petitioner did not choose to take part in the tender proceedings.

5. Recording the submissions of the learned Standing Counsel for the 3rd respondent Panchayat, this Writ Petition is disposed of. Since the petitioner is a registered contractor with the third respondent, whenever, the tenders, falling within the eligibility of the petitioner, are floated the petitioner must be informed through registered post with acknowledgement due."

மேற்சொன்ன ஆணையின் அடிப்படையில், சுசீந்திரம் பேரூராட்சியில் வேலைகளுக்கான ஒப்பந்தம் கோரும்போது ஒப்பந்த அறிவிப்புகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் என்ற விபரம் திருமதி. E. சாந்தி என்பவருக்கு 12.3.2021 நாளிட்ட கடிதம், பதிவுத்தபால் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் செயல் அலுவலர், சுசீந்திரம் பேரூராட்சி தெரிவித்துள்ளார். அனைத்து ஒப்பந்தங்களையும் தனக்கு வேண்டப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு கையூட்டுப் பெற்றுக்கொண்டு கொடுத்துள்ளதாக அளிக்கப்பட்ட புகார் உண்மைக்கு புறம்பானது என்றும் செயல் அலுவலர், சுசீந்திரம் பேரூராட்சி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் 06.8.2021 நாளிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், சுசீந்திரம் செயல் அலுவலர் டெண்டரில் முறைகேடு செய்துள்ளதால் இதுசம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தான் வழக்கு தொடர்ந்திருந்ததாகவும், வழக்கு விசாரணையில் சுசீந்திரம் செயல் அலுவலர் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு சாதாரண தபால் மூலம் கொடுத்ததாக மதுரை உயர்நீதிமன்றத்தில் கூறியிருந்தார் என்றும், அதற்கான பதிவேடுகளை எழுதுவதாகவும், கூறியிருந்தார். ஆனால், தமக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கொடுக்கவில்லை என்பதே உண்மையெனவும், ஆனால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தமக்கு பதிவுத் தபால் ஒப்புகை அட்டையுடன் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கொடுக்கும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், ஆனால் சுசீந்திரம் செயல் அலுவலர் செய்த தவறுகளை தன்னால் நிரூபிக்க முடியவில்லை என்றும், எனவே தமது புகார் மனுவை தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. செயல் அலுவலர், சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களது அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இம்முறையீட்டு மனு குறித்து சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 05.7.2021 நாளிட்ட அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து பராமரிப்புப் பணிகளுக்கான ஒப்பந்த அறிவிப்புகளும் முறையாக விளம்பரப்படுத்தி, அதன் அடிப்படையில் ஒப்பந்தங்கள் பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் செய்து முடிக்கப்பட்டதாகவும், மனுதாரரால் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்ட W.P (MD) No.566/2021ல் பேரூராட்சியில் நடைபெறும் வேலைகளுக்கான ஒப்பந்த அறிவிப்புகள் புகார்தாரருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டுமென குறிப்பிட்டு, வழக்கு முடித்துவைக்கப்பட்டதன்பேரில், பேரூராட்சியில் வேலைகள் செய்யப்படும்போது

ஒப்பந்த அறிவிப்புகள் மனுதாரருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் என்ற தகவலும் புகார் மனுதாரருக்கு பதிவுத் தபால் மூலம் தெரிவிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பணிகளில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லையென அறியப்படுகிறது. முறையீட்டு மனுதாரர், சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் செய்த தவறுகளை தன்னால் நிரூபிக்க முடியவில்லை என்றும், இதுகுறித்து ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்திற்கு தான் அளித்திருந்த புகார் மனுவினை தள்ளுபடி செய்யும்படியும் 6.8.2021 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளதை ஏற்று, இப்புகார் மனு மீதான மேல் நடவடிக்கையை கைவிடலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திருமதி. E. சாந்தி,
4/52, பஞ்சலிங்கபுரம்,
மகாதானபுரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்–629 702

செயல் அலுவலர், சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்